## மக்கள் சாசனம்

## இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

## 2008–2009

### முன்னுரை

ஒரு துறையில் செயல்படுத்தப்படும் பணிகள் பற்றியும் அந்தப் பணிகளை மக்கள் எவ்வாறு பெறுவது என்பது பற்றியும் அறிந்து கொள்ளும் பொருட்டு 'மக்கள் சாசனம்' தமிழக அரசால் வெளியிடப்படுகிறது. இந்த மக்கள் சாசனம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் வாயிலாக அரசு நடைமுறைப்படுத்தும் பல்வேறு நலத் திட்டங்களை எடுத்துரைக்கும்.

இத்துறையின் வாயிலாக அளிக்கப்படும் பல்வேறு பணிகளை விளையாட்டு வீரர்கள் மற்றும் இளைஞர்கள் செவ்வனே பயன்படுத்தி தங்களது திறமை மற்றும் செயல்திறனை வளர்த்துக் கொள்ள முடியும் என நம்பப்படுகிறது.

டி.பி.எம்.மைதீன்கான்
சுற்றுச்சூழல் துறை அமைச்சர்

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் – நிர்வாக அமைப்பு

<u>இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர்</u>

↓

அரசு செயலர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

↓

உறுப்பினர் செயலர்

↓

பொது மேலாளர்

↓

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| துணை பொது மேலாளர் | நிர்வாக அலுவலர் | கணக்கு அலுவலர் | உதவி செயற் பொறியாளர் (கட்டுமானம்) | முதுநிலை மேலாளர் | மேலாளர்-I | மேலாளர்--II | உதவி பொறியாளர் (கட்டுமானம் & மின்சாரம்) |

விளையாட்டு அரங்க அலுவலர்கள்

↓

| | | | | |
|---|---|---|---|---|
| நேரு விளையாட்டு அரங்கம் | உள் விளையாட்டு அரங்கம் | ஹாக்கி விளையாட்டு அரங்கம் | டென்னிஸ் விளையாட்டு அரங்கம் | நீச்சல் குள வளாகம் |

# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

## மண்டலம் மற்றும் மாவட்ட அளவிலான நிர்வாக அமைப்பு

### தலைமையகம்

முதுநிலை மேலாளர்

↓

அனைத்து நவீன விளையாட்டு அரங்கங்கள்

சிறப்பு விளையாட்டு விடுதி, சென்னை

### சென்னை

சென்னை மண்டலம்

மண்டல முதுநிலை மேலாளர்

↓

மாவட்ட விளையாட்டு அலுவலர்

↓

சென்னை
திருவள்ளூர்
காஞ்சிபுரம்
வேலூர்
விழுப்புரம்
திருவண்ணாமலை
கடலூர்

### கோவை

கோவை மண்டலம்

மண்டல முதுநிலை மேலாளர்

மாவட்ட விளையாட்டு அலுவலர்

↓

கோவை
ஈரோடு
உதகை
சேலம்
தர்மபுரி
கிருஷ்ணகிரி

விடுதி காப்பாளர்

↓

மாணவியர் விடுதி ஈரோடு

### திருச்சி

திருச்சி மண்டலம்

மண்டல முதுநிலை மேலாளர்

மாவட்ட விளையாட்டு அலுவலர்

↓

திருச்சி
தஞ்சை
நாகை
திருவாரூர்
அரியலூர்
நாமக்கல்

விடுதி காப்பாளர்

↓

திருச்சி விளையாட்டு விடுதி

### திருநெல்வேலி

திருநெல்வேலி மண்டலம்

மண்டல முதுநிலை மேலாளர்

மாவட்ட விளையாட்டு அலுவலர்

↓

திருநெல்வேலி
தூத்துக்குடி
கன்னியாகுமரி
இராமநாதபுரம்
விருதுநகர்
சிவகங்கை

விடுதி காப்பாளர்

↓

திருநெல்வேலி விளையாட்டு விடுதி

### மதுரை

மதுரை மண்டலம்

மண்டல முதுநிலை மேலாளர்

மாவட்ட விளையாட்டு அலுவலர்

↓

மதுரை
திண்டுக்கல்
புதுக்கோட்டை
தேனி

விடுதி காப்பாளர்

↓

மதுரை விளையாட்டு விடுதி

மக்கள் சாசனம்

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் கீழ் பின்வரும் துறைகள் செயல்பட்டு வருகின்றன:-

(i) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்
(ii) நாட்டு நலப்பணித் திட்டம்
(iii) தேசிய மாணவர் படை

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

தமிழக அரசின் அதிகாரபூர்வ விளையாட்டு அங்கமாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் செயல்பட்டு வருகிறது. அரசு, விளையாட்டுச் சங்கங்கள், விளையாட்டு ஆர்வலர்கள், நிறுவனங்கள் மற்றும் விளையாட்டு மற்றும் உடற்தகுதி ஆகியவற்றில் பொறுப்புடையவர்கள் ஆகிய வள ஆதாரங்களைப் பயன்படுத்தி மாநிலம் முழுவதிலும் விளையாட்டு மற்றும் உடல்தகுதி ஆகியவற்றை வளர்ப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். இம்முயற்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் கீழ்க்கண்ட இனங்களில் தனது கவனத்தைச் செலுத்தி வருகிறது.

- ☞ விளையாட்டு திறமையை கண்டுபிடிக்க வாய்ப்பு அளித்தல்
- ☞ கண்டறியப்பட்ட திறனாளர்களை மாநில, தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் சிறந்து விளங்கும் வகையில் முன்னேற்றுதல்.
- ☞ உடல் திறன், விளையாட்டு திறமையை கண்டறிதல், போட்டி மனப்பான்மை சகோதரத்துவம் ஆகியவற்றை அவர்களிடையே வளர்த்திடும் வகையில் மாநிலம் முழுவதிலும் போட்டிகளில் பங்கேற்கும் மனப்பான்மையினை வளர்த்தல்.
- ☞ சமுதாய அளவிலிருந்து பன்னாட்டு அளவிலான போட்டிகள் வரை நடத்துவதற்கான பல தரப்பட்ட தேவைகளுக்குப் பொருந்தும் வகையில் அரசு விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை அமைத்தல், அதனை தனியார் துறையிலும் ஊக்குவித்தல்.
- ☞ விளையாட்டினை கற்று கொள்ளும் பொழுதே பன்னாட்டு தரத்திற்கு ஈடாக சரியான நுணுக்கங்களை இந்தியாவிலும் வெளிநாட்டிலும், கற்பிக்கும் விதத்தில் பயிற்சி வகுப்புகள், கருத்தரங்குகள் முதலியவற்றை உரிய பயிற்சி முறைகள் மூலம் அளித்தல்.

கண்ணோட்டம்:–

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் விளையாட்டிலும், உடல் திறனிலும் ஆர்வம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

திறன் வாய்ந்த ஒவ்வொரு சிறாரும் அவரவரின் திறமைக்கேற்ப அதனை வளர்த்துக் கொள்ளவும், சிறப்பு நிலையினை அடையவும் சமமான வாய்ப்பு வழங்கப்படும்.

கொள்கை : –

சர்வதேச அளவில் விளையாட்டில் சிறப்படையும் நோக்கத்துடன் வரையறுக்கப்பட்டுள்ள நமது உத்திகள், ஒவ்வொரு நிலையிலும் பங்கேற்பவர்களுக்கு நிதி ஆதாரங்களின் அடிப்படையில் அவர்களின் தேவையின் அடிப்படையில் உதவிகள் வழங்குவதும், ஈடுபடுத்திக் கொள்ளச் செய்வதுமேயாகும்.

கொள்கைக் குரல்

முயற்சி செய்

கனவு காண்

முயன்று அடை

வெற்றி கொள்

உடனடியான சாதனை இலக்கு:

2012 ஒலிம்பிக் போட்டியில் பதக்கப்பட்டியலில் குறைந்த பட்சம் ஒன்பது தமிழக விளையாட்டு வீரர்களை இடம்பெறச் செய்தல்.

இறுதி இலக்கு:

ஒலிம்பிக்கிலும், இதர பன்னாட்டு அளவிலான போட்டிகளிலும் தொடர்ந்து சிறப்புறும் வகையில் ஒருங்கிணைப்பு, ஒத்துழைப்பு மற்றும் உத்திகளை கடைப்பிடிப்பதில் தமிழ்நாடு தலைமையேற்றுச் செல்வதை உறுதி செய்தல்.

உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள்

தமிழக அரசு தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு எண்ணற்ற உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள் வழங்கி வருகின்றது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விளையாட்டு உதவித் தொகைத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் 27 விளையாட்டுப் போட்டிகளில் தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு (குறைந்தபட்சம் தேசிய அளவில் பதக்கம் பெற்றவர்) உதவித் தொகையாக ஒருமுறை மட்டும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி மாணவராக இருந்தால் ரூ.5000/–மும், கல்லூரி / பல்கலைக் கழக மாணவராக இருந்தால் ரூ.6500/–ம் வழங்கப்பட்டு வருகிறது.

நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கான ஓய்வூதிய திட்டம்

நலிந்த நிலையிலுள்ள கடந்த காலங்களில் சிறந்து விளங்கிய விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் அவர்களுடைய மாத வருமானம் ரூ.2000/–க்கு மிகாமலும், 58 வயதைக் கடந்தவராகவும் இருந்தால், அவர்களுக்கு ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ரூ.500/– வீதம் அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் வழங்கப்படுகிறது. அந்த ஓய்வூதியர் இறந்த பிறகும் அவரது மனைவிக்கும் அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

விளையாட்டு வீரர்கள் நல நிதி

தேசிய மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் விளையாட்டு வீரர்கள் காயமடைந்தால் அவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் பொருட்டு விளையாட்டு வீரர்கள் நல நிதி ஒன்று தோற்று விக்கப்பட்டுள்ளது.

திறமையான விளையாட்டு வீரர்களுக்கென பணி ஒதுக்கீடு செய்து நியமனம் செய்தல்

தற்போது காவல்துறையில் நடைமுறையில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கான 5% இட ஒதுக்கீடு முறை ஏனைய சீருடைப் பணித் துறைகளான சிறைத் துறை மற்றும் வனத் துறைக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும் இது தீயணைப்பு மற்றும் மீட்புத் துறைக்கும் நீட்டிக்கப்படும்.

முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது

முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருதிற்காக தேர்ந்தெடுக்கப்படும் விளையாட்டு வீரர் / வீராங்கனைகளுக்கு தலா ரூ.1 இலட்சம் பண முடிப்பும் மற்றும் பாராட்டுப் பத்திரம், சம்பந்தப்பட்ட விளையாட்டினை பிரதிபலிக்கும் பட்டயமும் பரிசாக அரசு வழங்கி வருகின்றது. இதுவரை சர்வதேச போட்டிகளில் வெற்றிபெற்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்த 16 தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.

பயிற்றுநர்களுக்கும் உடற்பயிற்சி கல்வி ஆசிரியர்களுக்கும் முதலமைச்சர் விருது

ஒவ்வொரு ஆண்டும் சிறந்த பணியாற்றி தலைசிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கிடும் இரு பயிற்றுநர்கள் மற்றும் இரு உடற்பயிற்சி கல்வி ஆசிரியர்களுக்கு முதலமைச்சர் விருது வழங்கப்படும். ஒவ்வொரு நபருக்கும் ரூ 1 இலட்சம் பரிசுத் தொகையும் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படும். இதுவரை 4 பயிற்றுநர்கள் மற்றும் 3 உடற்கல்வி ஆசிரியர்களுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

ஊக்கத் தொகை

தமிழ்நாட்டைச் சார்ந்த விளையாட்டு வீரர்கள் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் போட்டிகளில் பதக்கங்கள் பெறும் பட்சத்தில் வீடு / அடுக்குமாடி வீடு / வீட்டுமனை வழங்குவதற்கு பதிலாக உயரிய ஊக்கத் தொகை வழங்க, 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் தெற்காசிய மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் பெறும் பட்சத்தில் அவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்க அரசு, அரசாணை (நிலை) எண்.5, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள்: 24.1.2002–ல் கீழ்க்கண்டவாறு ஆணை வழங்கியுள்ளது:

## போட்டிகள் மற்றும்  வழங்கப்படும் ஊக்கத் தொகை

(ரூபாய் இலட்சத்தில்)

| இனம் | விளையாட்டுக்களின் வரிசை கிரமம் | உயரிய ஊக்கத் தொகையின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| 1 | ஒலிம்பிக்<br>ஒற்றையர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 100 | 50 | 25 |
| 2. | ஆசிய விளையாட்டுப் போட்டிகள்<br>ஒற்றையர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 20 | 15 | 10 |
| 3. | காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள்<br>ஒற்றையர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 20 | 15 | 10 |

| இனம் | போட்டிகள் | ஒற்றையர் போட்டி | | | குழுப் போட்டி | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| 4 | தெற்காசிய / தேசிய விளையாட்டுப் போட்டிகள் | ரூ.1.00 இலட்சம் | ரூ. 50,000 | ரூ. 25,000 | ரூ. 20,000 | ரூ. 15,000 | ரூ.10,000 |
| | | | | | ஒவ்வொரு  விளையாட்டு வீரருக்கும் | | |

### இணை விளையாட்டு மேம்பாட்டு மையம்

கல்லூரிகளில் பயிலும் விளையாட்டு வீரர்களின் திறன்களை மேம்படுத்தி அவர்கள் பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டுப் போட்டிகளில் வெற்றிவாகை சூடி பெருமை சேர்த்திடும் வகையில், அரசு, 11 கல்லூரிகள் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு கல்லூரிகளில் உள்ள விளையாட்டுக் கட்டமைப்புகளை பயன்படுத்த இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்களை அமைக்க அனுமதி வழங்கியது.  மேற்படி கல்லூரிகளைச் சார்ந்த சிறந்த திறன்படைத்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்களில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.  கீழ்க்காணும் வகையில், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது.

| வ.எண். | வகை | தொகை |
|---|---|---|
| 1. | மாதம் ஒன்றுக்கு ஒரு மாணவனுக்கு உணவுப் படி | ரூ.600 |
| 2. | ஆண்டொன்றுக்கு ஒரு மாணவனுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கு | ரூ.500 |

விளையாட்டுப் பள்ளிவிடுதிகள்

நம் மாநிலத்தில் 11 விளையாட்டுப் பள்ளிவிடுதிகளை அரசு ஏற்படுத்தியுள்ளது.

| வ. எண் | விளையாட்டுப் பள்ளிவிடுதி பெயர் | பயிற்சி விளையாட்டுக்கள் |
|---|---|---|
| 1. | ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டுப் பள்ளி, நந்தனம், **சென்னை** | தடகளம், குத்துச்சண்டை, கால்பந்து, வளைகோல்பந்து |
| 2. | நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழக விளையாட்டுப் பள்ளி, **நெய்வேலி** | தடகளம், கூடைப்பந்து மற்றும் கால்பந்து |
| 3. | விளையாட்டு விடுதி, அண்ணா விளையாட்டரங்கம், திருச்சிராப்பள்ளி | தடகளம், கால்பந்து, கையுந்துபந்து மற்றும் வளைகோல்பந்து |
| 4. | விளையாட்டு விடுதி, ரேஸ் கோர்ஸ் விளையாட்டு அரங்கம், **மதுரை** | தடகளம், கால்பந்து, கூடைப்பந்து மற்றும் கையுந்துபந்து |
| 5. | விளையாட்டு விடுதி, அண்ணா விளையாட்டரங்கம், திருநெல்வேலி | தடகளம், வளைகோல்பந்து, கையுந்துபந்து |
| 6. | விளையாட்டு விடுதி, வ.உ.சி. விளையாட்டரங்கம், **ஈரோடு** (மாணவியருக்கு) | தடகளம், கையுந்துபந்து, கால்பந்து |
| 7. | பாரதி வித்யாபவன், திண்டல், **ஈரோடு** (மாணவியருக்கு) | கூடைப்பந்து |
| 8. | செல்வம் உயர் நிலைப்பள்ளி, **நாமக்கல்** (மாணவியருக்கு) | தடகளம் மற்றும் வாள்சண்டை |
| 9. | கே.வி.ஆர் மேல்நிலைப் பள்ளி, **திருச்செங்கோடு** | கையுந்துபந்து |
| 10. | அரசு மேல்நிலைப் பள்ளி, புதூர், **சென்னை** | கிரிக்கெட் |
| 11. | டான் பாஸ்கோ இளைஞர் மையம், செங்குன்றம், **சென்னை** | கால்பந்து |

விளையாட்டு விடுதிகள் விளையாட்டுக் காப்பாளர்கள், பயிற்றுநர்கள் மற்றும் சமையற்காரர்கள் ஆகியோர்களைக் கொண்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நேரிடை பார்வையின்கீழ் செயல்பட்டு வருகிறது.

**தேர்வு முறை:** தேர்வுகள் இரண்டு அடுக்கு முறையில், அதாவது மாவட்ட மற்றும் மாநில அளவில் நடத்தப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| மாவட்ட அளவிலான தேர்வு | உடற்கூறு திறன் தேர்வுகள் நடத்தப்படும் |
| மாநில அளவிலான தேர்வு | குழு விளையாட்டுக்களில் விளையாட்டுத் திறன் மற்றும் நுட்பம் குறித்தும், தனியாள் விளையாட்டுக்களில் திறமை குறித்தும் தேர்வுகள் நடத்தப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் 8–ம் வகுப்பு, 9ம் வகுப்பு மற்றும் 11–வது வகுப்பில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு தேர்ச்சி பெற்ற பயிற்றுநர்களால் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. |

விளையாட்டுப் பள்ளிவிடுதிகளில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையான 710 மாணவர், மாணவியர்கள் சேர்ப்பதற்கும், தங்கி பயிற்சி பெறவும், ஊட்ட உணவிற்காகவும் மற்றும் இதர செலவிற்காகவும் கீழ்க்கண்டவாறு அரசு மானியம் அளிக்கிறது.

| வ. எண். | வகை | | தொகை |
|---|---|---|---|
| 1. | மாதம் ஒன்றிற்கு ஒரு மாணவனுக்கு வழங்கப்படுகின்ற உணவிற்கான தொகை | | ரூ.1200 |
| 2. | சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்கான படி ஒரு மாணவனுக்கு | | ரூ.1600 |
| 3. | ஆண்டுக்கு ஒரு முறை ஒரு மாணவனுக்கு உண்டான விளையாட்டுப் பொருட்கள் வாங்க | | ரூ. 250 |
| 4. | ஒரு மாணவனுக்கு ஒரு ஆண்டிற்கு வழங்கப்படுகின்ற பணித் தொகை | | |
| | அ) | விளையாட்டுப் பள்ளி | ரூ. 400 |
| | ஆ) | விளையாட்டு விடுதி | ரூ. 300 |

சிறப்பு விளையாட்டு விடுதி

தேசிய மற்றும் பன்னாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெறும் திறமை வாய்ந்த, கல்லூரி மாணவர்களுக்கென ஒரு சிறப்பு விளையாட்டு விடுதி சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் செயல்பட்டு வருகிறது. 52 விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெறும் இச்சிறப்பு விளையாட்டு விடுதியில் கீழ்க்கண்ட விளையாட்டுக்களில் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது: 1) தடகளம் 2) கூடைப்பந்து 3) குத்துச்சண்டை 4) நீச்சல் மற்றும் 5) கையுந்துபந்து. மேற்கண்ட விளையாட்டுக்களில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்கள் தங்கள் கல்லூரிப் படிப்பினை தொடர்வதோடு அவர்களின் விளையாட்டுத் திறனை மேம்படச் செய்வதுமே இவ்விடுதியின் குறிக்கோளாகும். இந்த விடுதி, தேசிய பன்னாட்டு அளவில் 26 விளையாட்டு வீரர்களை உருவாக்கியுள்ளது.

| வ. எண். | வகை | தொகை |
|---|---|---|
| 1. | மாணவர் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கான உணவிற்கான தொகை (மாதம் ஒன்றிற்கு) | ரூ.1800 |
| 2. | சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்கான படி ஒரு மாணவருக்கு ஆண்டு ஒன்றுக்கு | ரூ.3000 |
| 3. | ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு படிப்புக் கட்டணம் | ரூ.1500 |

**<u>உடற்திறன் தேர்வு</u>**

மாநிலத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் 6, 7, 8 ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு உடற்திறன் தேர்வு போட்டிகள் நடத்துவதற்கான திட்டத்தினை அரசு அறிமுகப்படுத்தி அவர்களுக்கு உடற்தகுதி மற்றும் விளையாட்டு அறிக்கை அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

மாணவர்களது இந்த உடற்திறன் தேர்வு முடிவுகளை School Mail, அரசு ஆணை, சுற்றறிக்கை மற்றும் தகவல்கள் அனுப்புவதற்காக உருவாக்கப்பட்ட மின்னனு தொடர்பு மூலமாக அனுப்பிவைக்கும்படி தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உடற்திறன் தேர்வு நடத்துவதன் மூலம் தனித்திறன் போட்டி உறுதி செய்யப்படுவதோடு மாணவ / மாணவியர்கள் குறிப்பிட்ட விளையாட்டில் பங்கு கொள்ள பெற்றுள்ள திறமையும் கண்டறியப்படுகிறது.

உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கும் திட்டத்தின் கீழ் உடற்திறன் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற திறமையானவர்களை 64 இடங்களில் நடைபெறும் மாவட்ட அளவிலான போட்டிகளிலிருந்தும், அதன் பின்னர் 9 இடங்களில் நடைபெறும் மண்டல அளவிலான போட்டிகளிலிருந்தும் மாநில அளவில் தேர்ந்தெடுத்து அவர்கள் பயிற்சி முகாமிற்கு அழைக்கப்பட்டு வல்லுநர் குழுவினரால் சிறப்பு தேர்வு நடத்தி மாணவ / மாணவியர்களது தகுதியின் அடிப்படையில் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்படும் சிறப்பு அகாடமியில் சேர்க்கப்படுகின்றனர்.

**<u>சிறப்பு அகாடமி</u>**

சிறப்பு விளையாட்டு அகாடமிகள் உலகம் முழுவதும் தற்பொழுது பிரபலமாக உள்ளன. இந்த சிறப்பு விளையாட்டு அகாடமி, பயிற்சி பெறுபவர்களின் திறமையை மேம்படுத்தவும் அவர்கள் பெற்றி வாகைசூடவும் வழிவகுக்கின்றது. ஒருவரின் திறமையை குறிப்பிட்ட விளையாட்டில் மேம்படுத்த தனி முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. உடல் ரீதியான போட்டிகள், உளவியல் ரீதியான பயிற்சி வகுப்புகள், சத்துணவு அறிவுரை, விளையாட்டு மருத்துவ உதவி, அறிவியல் ரீதியாக திட்டமிடப்பட்ட மற்றும் சீரான பயிற்சி. ஊட்ட உணவு, விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பிற உதவிகள் இந்த சிறப்பு விளையாட்டு அகாடமியில் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த சிறப்பு விளையாட்டு அகாடமிகளில் மாணவ / மாணவியர்களின் தேவைக்கேற்ப உணவிற்காக கூடுதல் உதவி, சத்துணவு மற்றும் விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்படுகிறது.

கீழ்கண்ட 17 சிறப்பு அகாடமிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | த.வி.மே.ஆ | அதிவேக ஓட்டம் மற்றும் குதித்தல் அகாடமி | சென்னை |
| 2. | த.வி.மே.ஆ | கிரிக்கெட் அகாடமி | சென்னை |
| 3. | த.வி.மே.ஆ | கையுந்துபந்து அகாடமி | சென்னை |
| 4. | த.வி.மே.ஆ | டைவிங் அகாடமி | சென்னை |
| 5. | த.வி.மே.ஆ | ஆண்கள் வளைகோல் அகாடமி | சென்னை |
| 6. | த.வி.மே.ஆ | பெண்கள் வளைகோல் அகாடமி | சென்னை |
| 7. | த.வி.மே.ஆ | சந்திரா மேசைப்பந்து அகாடமி | சென்னை |
| 8. | த.வி.மே.ஆ | ஏ.கே.ஜி மேசைப்பந்து அகாடமி | சென்னை |
| 9. | த.வி.மே.ஆ | டால்ஃபின்நீச்சல் அகாடமி | சென்னை |
| 10. | த.வி.மே.ஆ | தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் அகாடமி | சென்னை |
| 11. | த.வி.மே.ஆ | ஆண்கள் கால்பந்து அகாடமி | திருநெல்வேலி |
| 12. | த.வி.மே.ஆ | எறிதல் அகாடமி | விருதுநகர் |
| 13. | த.வி.மே.ஆ | குறுந்தூர ஓட்ட அகாடமி | திருவண்ணாமலை |
| 14. | த.வி.மே.ஆ | நீள் தூர ஓட்ட அகாடமி | உதகமண்டலம் |
| 15. | த.வி.மே.ஆ | சிறுமியர் கால்பந்து அகாடமி | திண்டுக்கல் |
| 16. | த.வி.மே.ஆ | எல்லீஸ் நகர் மேசைப்பந்து அகாடமி | மதுரை |
| 17. | த.வி.மே.ஆ | கூடைப்பந்து அகாடமி | அறந்தாங்கி |

* த.வி.மே.ஆ – தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

அகாடமியில் பயிற்சி பெறுபவர்களுக்கு கீழ்க்கண்ட வசதிகள் வழங்கப்படுகின்றன

1. மாதாந்திர இருப்பிட பயிற்சி முகாம்கள்
2. உயர்நிலைப் போட்டிகளில் பங்கேற்றல்
3. அறிவியல் முறையிலான சிறப்பு பயிற்சி
4. அதி நவீன உபகரணங்களால் பயிற்சி அளித்தல்
5. பிரத்யேக காலணிகள் / ஸ்பைக்ஸ் மற்றும் விளையாட்டு உபகரணங்கள்
6. ஊட்டச்சத்து நிபுணர்களின் அறிவுரை
7. பயிற்சியாளர்கள் நாட்குறிப்பேடு பராமரித்தல் மற்றும் நீண்ட தூர ஓட்ட பயிற்சி முறைகளை செயல்படுத்துதல்
8. பயிற்சி முகாம்களுக்கிடையில் தங்களுடைய சொந்த ஊரில் அன்றாட பயிற்சி மேற்கொள்வதற்கான பயிற்சி அட்டவணை
9. மனோதத்துவத்திற்கான வகுப்புகள்
10. ஒளி நாடா மூலம் குறைகள் திருத்துதல்
11. போட்டிகளில் கலந்து கொள்ளும்போது சிறப்பு இருப்பிட வசதி ஏற்படுத்துதல்
12. போட்டிகளில் கலந்து கொள்ளும்போது சிறப்பு உணவு அளித்தல்
13. விளையாட்டு மருத்துவ வல்லுனர்களின் உரை
14. மலைப்பிரதேசங்களில் வழங்கப்படும் பயிற்சி
15. விளையாட்டின் போது ஏற்படும் காயம் மற்றும் மருந்துள் குறித்த விழிப்புணர்வு
16. ஒவ்வொரு பயிற்சி முகாமின் போதும் பயிற்சியாளர்களின் திறமையை ஆய்வு செய்து முன்னேற்றமில்லாத பயிற்சியாளரை வெளியேற்றுதல்

இந்த சிறப்பு அகாடமிகள் நன்றாக செயல்படுவதோடு அதில் பயிற்சி பெறுபவர்கள் தமிழக அணியில் பங்கு கொள்கின்றனர். இந்திய முகாமிற்கு தேர்வு செய்யப்படுகின்றனர். மேலும், தேசிய / பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கமும் பெறுகின்றனர்.

<u>திறனாளர்களை உருவாக்கும் திட்டம்</u>

தேசிய அளவில் பதக்கங்கள் பெறும் தமிழகத்தை சார்ந்த 20 வயதுக்குட்பட்ட தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் அவர்களது விளையாட்டு திறனை முன்னேற்ற தேவையான நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு:

- இத்திட்டத்தில் சேருவதற்கான சேர்ப்பு சான்றிதழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படுகிறது.
- நவீன விளையாட்டு அரங்கங்களில் பயிற்சி பெற இலவச நுழைவு அட்டை.
- போட்டிகள் மற்றும் பயிற்சிக்காக ஊட்ட உணவு, காலணிகள், விளையாட்டு சீருடைகள், விளையாட்டு உபகரணங்கள் வாங்க நிதிஉதவி.
- வெளிநாடுகளில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவும் மற்றும் பயிற்சிகளுக்கும் உண்டான நிதிஉதவி.
- வெளிநாட்டு பயிற்சியாளர்களிடம் பயிற்சி பெற உணவு, உறைவிட மற்றும் பயண செலவினங்களுக்கான நிதிஉதவி.
- தங்கள் திறமையை மேம்படுத்தி கொள்ள பெங்களூரில் நடைபெறும் உடல் ரீதியான மற்றும் மன ரீதியான பயிற்சிக்கு அனுப்புதல்.
- சிறந்த ஊட்ட உணவு வல்லுநர்களால் உணவு பற்றிய விளக்கங்கள்.
- மனோ தத்துவ பயிற்சி வகுப்புக்கள் விளையாட்டு மருத்துவம் பற்றிய கருத்தரங்குகளில் பங்கேற்பு.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் பணிகளை நீங்கள் எவ்வாறு கண்டறியலாம்?

- தமிழ்நாடு வியைாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணைய தளம் www.sportsinfotn.com. (சிறந்த வழி)
- இணைய தளத்திலிருந்து விண்ணப்பங்களை பெற்றிடலாம்.
- செய்தித்தாள்களில் விளையாட்டுப் பகுதியில் வெளியிடப்படும் செய்திக் குறிப்புகள்.
- மாவட்ட அளவில் தகவல் பலகை
- விளம்பரங்கள்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் அலுவலர்களை எவ்வாறு தொடர்பு கொள்ளலாம்?

- ஒவ்வொரு மாவட்ட விளையாட்டு அலுவலரும் மாவட்ட விளையாட்டு அலுவலகத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் இருப்பார். அவரை தொடர்பு கொள்ளலாம்.

- தலைமையலுவலகத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் பார்வையாளர் தினமாக அனுசரிக்கப்படுகிறது. அனைத்து முதுநிலை அலுவலர்களையும் வேலைநாட்களில் தொடர்பு கொள்ளலாம். திங்கட்கிழமைகளில் பார்வையாளர்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

- எங்களது இணைய தளத்தில் உள்ள மின் அஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள் மின் அஞ்சல் முகவரி – www.sportsinfotn.com.
(பதிலினை 72 மணி நேரங்களுக்குள் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்)

நமது வலிமையினை பயன்படுத்தி தமிழ்நாட்டின் அனைத்து முனைகளிலும் உடல்திறன் தகுதி மற்றும் விளையாட்டினை வளர்த்திட ஒருங்கிணைந்து செயல்படுவதையே தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நம்புகிறது.

நமது முயற்சிகளை ஒன்று திரட்டி அதிகபட்ச அளவில் பயன் பெறுவதையே தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நம்புகிறது.

விளையாட்டு சங்கங்கள், பள்ளிகள், கல்லூரிகள், விளையாட்டு நிறுவனங்கள், அறக்கட்டளைகள், ஆர்வலர்கள், தனியார்/ தனியார் துறை நிறுவனங்கள் / அறக்கட்டளைகள் / வியாபாரிகள் / உடற்கல்வி ஆசிரியர்கள் / பயிற்றுநர்கள் – சுருங்கக்கூறின் அனைவரின் **கூட்டு முயற்சியால்** மட்டுமே தமிழ்நாடு விளையாட்டிலும், உடல்திறன் தகுதியிலும் தலைமையேற்றுச் செல்வதை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், உறுதி செய்திட இயலும்.

மக்களுடன் இணைந்து பணியாற்றுவதையே தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பெரிதும் விரும்புகிறது.

## நாட்டு நலப்பணித் திட்ட
## நிர்வாக அமைப்பு முறை

### மத்திய அளவில் நிர்வாக அமைப்பு முறை

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம்

↓

திட்ட ஆலோசகர்
மண்டல மையம்
(துணைத் திட்ட ஆலோசகர்)

## மாநில அளவில் நிர்வாக அமைப்பு முறை
## நாட்டு நலப்பணித் திட்டம்

### விளையாட்டு மற்றும் இளைஞர் நல அமைச்சகம்

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைச் செயலர்

↓

மாநில ஒருங்கிணைப்பாளர்
(கல்லூரிக் கல்வி இயக்குநர்)

↓

மாநிலத் தொடர்பு அலுவலர்

↓

| பல்கலைக் கழக ஒருங்கிணைப்பாளர் | தொழில்நுட்பக் கல்வி ஒருங்கிணைப்பாளர் | பள்ளிக் கல்வி இயக்கக ஒருங்கிணைப்பாளர், ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்சி நிலைய இயக்கக ஒருங்கிணைப்பாளர்கள் |
|---|---|---|

திட்ட அலுவலர்
(கல்லூரி, தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரி, பள்ளி)

↓

மாணவத் தொண்டர்கள்

# தமிழ்நாட்டில் நாட்டு நலப்பணித் திட்டம்

நாட்டு நலப்பணித் திட்டமானது இந்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கி வரும் ஒரு நிரந்தர இளைஞர் நலத் திட்டமாகும்.

இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. இத்திட்டத்தில் சென்ற ஆண்டில் 3,05,800 ஆக இருந்த மாணவத் தொண்டர்களின் எண்ணிக்கை 2007-08 ஆம் ஆண்டில் 3,36,380 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அரசாணை நிலை எண்.885 கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை, நாள் 16.12.1996ன் படி, மாநில நாட்டு நலப்பணித் திட்ட குழுமமானது தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சி கழகத்தின் நிர்வாக ஆளுகையிலிருந்து கல்லூரிக் கல்வி நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டது. தற்போது கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களே மாநில ஒருங்கிணைப்பாளராகவும் மாநில நாட்டு நலப்பணித் திட்ட அனைத்து அலுவலகங்களுக்கும் தலைவராகவும் செயல்படுகிறார்.

மாநில தொடர்பு அலுவலரின் துணையோடு, பல்வேறு சிறப்பு முகாம்களும், தொடர் பணிகளும் நடத்தி கிராமங்களைத் தத்தெடுத்து சமுதாயப் பணிகள் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில் நாட்டு நலப்பணித் திட்டமானது 37 பல்கலைக் கழகங்கள் (கல்லூரி அளவில்), தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் (தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரிகள்), ஆசிரியர் பயிற்சி நிலையங்கள், பள்ளிக் கல்வி இயக்ககம் (மேல்நிலைப் பள்ளி அளவில்) ஆகியவற்றில் செயல்பட்டு வருகின்றன.

நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் இத்திட்டங்களுக்கான மானியங்கள் வழங்குதல், திட்டங்கள் செயல்படுவதை ஆய்வு செய்தல் மற்றும் நிதி ஒதுக்கீட்டை முழுவதுமாகப் பயன்படுத்துதல் முதலிய பணிகளை மேற்கொள்கிறார்.

## நிதி:

இத்திட்டத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசின் மானியத் தொகை 7:5 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது. இத்திட்டங்களை முழுமையாகச் செயல்படுத்தும் பொருட்டு பல்கலைக் கழக / தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் / பள்ளிக் கல்வி இயக்ககம் முதலியவற்றிற்கு நாட்டு நலப்பணித் திட்ட குழுமம் மானியத்தை விடுவிக்கிறது. சிறப்பு மற்றும் தொடர் முகாம்கள் மூலம் நாட்டு நலப்பணித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. தொடர் முகாம்கள் மூலம் மாணவத் தொண்டருக்கு ரூ.160/- வீதமும், சிறப்பு முகாம் பணிக்கு ரூ.300/- வீதமும் மான்யம் விடுவிக்கப்படுகிறது.

மாநில நாட்டு நலப்பணித்திட்ட குழுமம் இத்திட்டத்திற்கான தணிக்கை அறிக்கைகளை பல்கலைக் கழகங்களிடமிருந்து ஒவ்வொரு வருடமும் பெற்று நிதி பயன்பாட்டினை ஆய்வு செய்கிறது.

<u>நாட்டு நலப் பணித்திட்டச் செயல்பாடு (ஒரு மாணவருக்கு)</u>

தொடர் பணிகளுக்கு = ஒரு மாணவருக்கு ஒரு ஆண்டிற்கு 120 மணி நேரம் பணி
சிறப்புப் பணிகளுக்கு = ஒரு மாணவருக்கு ஒரு ஆண்டிற்கு 10 நாட்கள் பணி
இத்தொடர் பணிகளுக்கு ஒரு மாணவருக்கு ரூ.160/- வீதம் (பங்கீட்டு விவரம்)

| | | |
|---|---|---|
| 1. | பல்கலைக் கழக அளவில் நிர்வாகச் செலவினம்<br>(திட்ட அலுவலருக்கான ஊதியம் உட்பட) | ரூ.30/- |
| 2. | கல்லூரி அளவில் நிர்வாகச் செலவு<br>(கைச் செலவிலிருந்து திட்ட அலுவலருக்கான மாத ஊதியம் ரூ.100/- எழுத்தர் மற்றும் எழுதுபொருள், சில்லரை செலவினத்திற்காக) | ரூ.40/- |
| 3. | திட்ட வளர்ச்சி<br>(முகாம் ஆயத்தப் பணி, புத்தாக்கம், பயணப்படி மற்றும் ஆய்வாளருக்கான ஊதியம், மாணவருக்கான சிற்றுண்டி மற்றும் போக்குவரத்துச் செலவு போன்றவை) | ரூ.90/- |
| | மொத்தம் = | ரூ.160/- |

சிறப்பு முகாம் ரூ.300/- (ஒரு மாணவருக்கு)

(ஒரு மாணவருக்கு போக்குவரத்து, தங்குமிடம்
மற்றும் இதர சில்லரைச் செலவினத்திற்காக ரூ.30/- (ஒரு நாளுக்கு)

# தேசிய மாணவர் படை

## 1. தேசிய மாணவர் படையின் தொடக்கம்

தேசிய மாணவர் படை 16.4.1948 அன்று தோற்றுவிக்கப்பட்டது. தேசிய மாணவர் படை சட்டம் (எண்.31/1948) அறிமுகப்படுத்தப்பட்டபின் மைய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் இது செயல்படத் தொடங்கியது. தேசிய மாணவர் படை முறையாக 15.7.1948 அன்று அமைக்கப்பட்டது. தேசிய மாணவர் படையில் குறிக்கோள் "ஒற்றுமையும் ஒழுங்கும்" ஆகும்.

## 2. நோக்கங்கள்

(அ) இந்நாட்டின் இளைஞர்களிடையே நற்பண்பு, துணிவு, நட்புடைமை, ஒழுங்குமுறை, தலைமைப் பண்பு சமய சார்பற்ற நோக்கு, துணிச்சல் உணர்வு, தன்னலமற்ற சேவையில் உயர் குறிக்கோள்களை வளர்த்தல்.

(ஆ) ஒழுங்குமுறை பயிற்சி பெற்று சிறந்த செயல் நோக்குடைய இளைஞர்களின் மனித வளத்தைக் கொண்டு, அவர்கள் வாழ்வின் அனைத்து நடைமுறைகளிலும் தலைமை பொறுப்பு வகிக்க வகை செய்து அவர்களை நாட்டுப் பணிக்காக எந்த நேரத்திலும் தயாராக இருக்குமாறு செய்தல்.

(இ) ஆயுதம் தாங்கிய படைப் பிரிவுகளில் சேருவதற்கு இளைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில் தக்க சூழ்நிலையை உருவாக்குதல்.

## 3. தேசிய மாணவர் படை நிருமம் (கம்பெனி) மற்றும் படைப்பிரிவை உருவாக்குதல்

கல்லூரிகள்/தொழில்நுட்பப் பயிலகங்கள் அளவில் உள்ள முதுநிலைகோட்டம் மற்றும் முதுநிலை பிரிவு 'நிருமம்' (Companies) எனப்படும். பள்ளி அளவில் உள்ள இளநிலை கோட்டம் மற்றும் இளநிலைப்பிரிவு 'படைப்பரிவு' (Troops) எனப்படும். தேசிய மாணவர் படை நிருமம் மற்றும் படைப்பிரிவை உருவாக்க, ஆர்வமுள்ள கல்வி நிறுவனங்கள் வரையறுக்கப்பட்ட படிவத்தில் அருகாமையிலுள்ள தேசிய மாணவர் படை அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம்.

## 4. தேசிய மாணவர் படையில் மாணவர்களை சேர்த்துக் கொள்ளுதல்

(அ) எட்டாம் வகுப்பு மற்றும் ஒன்பதாம் வகுப்பில் பயிலும் மாணவ/மாணவியர்கள் தேசிய மாணவர் படையில் இளநிலை கோட்டம்/இளநிலை பிரிவில் சேர்த்துக் கொள்ளப்படுவர். (தேசிய மாணவர் படையில் சேரும் போது மாணவ/மாணவியர்கள் 13 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்)

(ஆ) பட்டப்படிப்பின் முதல்/இரண்டு/மூன்றாம் ஆண்டில் பயிலும் மாணவ மாணவயிர்கள் தேசிய மாணவர் படையில் முதுநிலைக்கோட்டம்/ முதுநிலைப்பிரிவில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

5. **தேசிய மாணவர் படையின் மாணவர் எண்ணிக்கை மற்றும் கல்வி நிலையங்களில் தேசிய மாணவர் படை பிரிவு விவரங்கள்**

| மாநிலம்/ யூனியன் பிரதேசம் | மாணவர் எண்ணிக்கை | | | | | தேசிய மாணவர் படையில் உள்ள கல்வி நிறுவனங்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | முதுநிலை கோட்ட மாணவர்கள் | இளநிலை கோட்ட மாணவர்கள் | முதுநிலை பிரிவு மாணவியர்கள் | இளநிலை பிரிவு மாணவியர்கள் | மொத்தம் | பள்ளிகளின் எண்ணிக்கை | கல்லூரிகளின் எண்ணிக்கை | மொத்தம் |
| தமிழ்நாடு | 21923 | 66230 | 5187 | 5450 | 98790 | 698 | 326 | 1024 |

6. **தேசிய மாணவர் படையின் பயிற்சி நடவடிக்கைகள்**

இவை விரிவாக நான்கு பகுதிகளாக பிரிக்கப்படலாம். அவையாவன: நிறுவனப் பயிற்சி (50%), சமுதாய மேம்பாடு (22%), துணிகர செயல் மற்றும் விளையாட்டுப் பயிற்சி (20%) மற்றும் இளைஞர் பரிமாற்றத் திட்டம் (8%).

7. **நிர்வாகம்**

தேசிய மாணவர் படை மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் மூலம் நிர்வகிக்கப்படுகிறது. தமிழ்நாட்டிலுள்ள தேசிய மாணவர் படைப் பிரிவின் நிர்வாகத்தை தங்குதடையின்றியும் திறமையாகவும், மேற்கொள்ளவதற்கென தேசிய மாணவர் படையின் துணைத் தலைமை இயக்குநருக்கு தமிழக அரசின் கீழ் உள்ள துறைத் தலைவர் அந்தஸ்தில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு, புதுச்சேரி, அந்தமான் (ம) நிக்கோபார் தீவுகள் ஆகியவை இந்த இயக்ககத்தின் அதிகார வரம்பில் அடங்கும்.

8. **நிதி**

தேசிய மாணவர் படை குறித்த செலவுகள், ஒப்புக் கொள்ளப்பட்ட அடிப்படையில், மத்திய மாநில அரசுகளால் இணைந்து ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. தற்போது முகாம்களுக்கு ஏற்படும் செலவு, மத்திய மாற்றும் மாநில அரசால் 75:25 என்ற விகிதாச்சாரத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

## 9. தேசிய மாணவர் படை மாணவர்கள் அடையும் பயன்கள்

| வழங்கப்படும் பயன்கள் | அடையும் பயன்களின் தன்மை | | |
|---|---|---|---|
| ஐ.எம்.ஏ டேராடன் | 64 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | | |
| ஒ.டி.ஏ சென்னை (எஸ்.எஸ்.சி) | 100 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | | |
| இந்தியன் நேவல் அகாடெமி | ஒருபாடப்பிரிவுக்கு 6 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | | |
| இந்தியன் ஏர்போர்ஸ் அகாடெமி | பறக்கும் பயிற்சி உட்பட அனைத்து பாடப்பிரிவுகளிலும் 10% இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | | |
| | மாலமிகள் / விமானிகள் ஆகிய துறைகளில் ஆள் எடுப்பின்போது கூடுதல் மதிப்பெண்/ மதிப்பு/ முன்னுரிமை அளிக்கப்படுகிறது. | | |
| துணை இராணுவப் படை | ஆள் எடுப்பின் போது கூடுதல் மதிப்பெண் / மதிப்பு முன்னுரிமை வழங்கப்படுகிறது. | | |
| தேசிய மாணவர் படை மாணவர்கள் | “C” சான்றிதழ் பெற்றுள்ள தேசிய மாணவர் படை மாணவர்கள் முன்னுரிமை அளிக்கப்பட்டு மத்திய தொழிற்சாலை பாதுகாப்புப் படையின் CG1/CG1/NCC WTO/AM1/SM1 ஆகிய பிரிவுகளில் பணியமர்த்தப்படுகின்றனர். | | |
| மாநில அரசு | காவல்துறை உட்படி மாநில அரசுப் பணிகளில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. | | |
| தொழில் துறை | பர்வேறு தனியார் நிறுவனங்களில் பணி வழங்கப்படுகிறது. | | |
| முப்படைத் தளபதிகள் பெயரில் வழங்கப்படும் உதவித் தொகை | முதுநிலை பிரிவு / முதுநிலை கோட்டப் பிரிவு சிறந்த மாணவர்களுக்கு வருடத்திற்கு ரூ.6000/- உதவித்தொகை | | |
| தேசிய மாணவர் படை தலைமை இயக்குநர் பெயரில் சிறந்த மாணவருக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை | நிலை | முதுநிலை கோட்டம் / முதுநிலை பிரிவு | இளநிலை கோட்டம்/ இளநிலை பிரிவு |
| | I | 5000/- | 3000/- |
| | II | 3000/- | 1000/- |
| | III | 1000/- | 500/- |
| குடியரசு தின முகாம்களில் அனைத்திந்திய அளவில் தேசிய மாணவர் படை சிறந்த மாணவர்களுக்கு துணைத் தலை இயநர் வழங்கும் ரொக்கத் தொகை | நிலை | பதக்கம் வென்ற ஒவ்வொரு மாணவருக்கும் | ஒவ்வொரு குழுப் போட்டிக்கும் |
| | I | 1500/- | 100/- |
| | II | 1000/- | 75/- |
| | III | 750/- | 50/- |

| தேசிய மாணவர் படை நலச் சங்கம் அளிக்கும் நலத்திட்டங்கள் | வகை | பேரிடர் ஏற்படுத்தக் கூடிய தேசிய மாணவர் படை பயிற்சியின் போது | வழக்கமான நடவடிக்கைகளின் போது |
|---|---|---|---|
| | மாணவர் இறக்க நேரிடும் நேர்வுகளில் | 2,50,000/- | 2,00,000/- |
| | நிரங்நதர இயலாமை (உனம்) நேர்களில் | 2,50,000/- வரை | 2,00,000/- வரை |
| | தற்காலிகமான இயலாமை நேர்வுகளில் | 1,50,000/- வரை | 1,50,000/- வரை |
| | ➢ கல்வி நிறுவனங்களில் பாராட்டிற்குரிய 500 தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு, வருடத்திற்கு ரூ.5000/- வீதம் படிப்புதவித் தொகை<br>➢ ஒவ்வொரு பிரிவிலும் 4 சிறந்த தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு ரூ.3000/-, இரண்டாவது சிறந்த 4 தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு ரூ.2000/- | | |
| சஹாரா குழு நிறுமம் (பிரிவு) | படிப்புதவித் தொகை | தொகை (ரூ) | குறிப்புரை |
| | இளநிலைக் கோட்டம் | 6000/- | ஒவ்வொரு குழு பணித் தலைமை அலுவலகத்திற்கும் 3 நபர் வீதம் |
| | இளநிலைப் பிரிவு | 6000/- | ஒவ்வொரு குழு பணித் தலைமை அலுவலகத்திற்கும் 3 நபர் வீதம் |
| | முதுநிலைக் கோட்டம் | 12,000/- | ஒவ்வொரு குழு பணித் தலைமை அலுவலகத்திற்கும் 2 நபர் வீதம் |
| | முதுநிலைப் பிரிவு | 12,000/- | ஒவ்வொரு குழு பணித் தலைமை அலுவகத்திற்கும் 2 நபர் வீதம் |
| | தொழிற்படிப்பு உயர்கல்விக்கு | 30,000/- | தேசிய மாணவர் படை இயக்ககத்தின் 5 மாணவர்களுக்கு |

| | |
|---|---|
| தமிழ்நாடு அரசு | ➢ வருடத்திற்கு ரூ.1200/- வீதம் 80 முதுநிலை கோட்டம்/முதுநிலை பிரிவு தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை<br><br>➢ வருடத்திற்கு ரூ.600/- வீதம் 90 இளநிலை கோட்டம்/ இளநிலை பிரிவு தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை<br><br>➢ குடியரசு தின முகாம் மற்றும் குடியரசு தினம் தொடர்பான பயிற்சிகளில் பங்கு பெற வருடத்திற்கு ரூ.3.17 இலட்சங்கள்<br><br>➢ இளநிலை மற்றும் முதுநிலை ஆசிரியர் தேர்வு மற்றும் பணி அமர்வின் போது வாய்மொழித் தேர்வில் 1/2 மதிப்பெண் வழங்கப்படுகிறது. |

10. கூடுதலான தகவல்களுக்கு துணைத் தலைமை இயக்குநர், தேசிய மாணவர் படை (தமிழ்நாடு, புதுச்சேரி & அந்தமான் நிக்கோபார்) புனித ஜார் கோட்டை, சென்னை-9 அல்லது அருகாமையிலுள்ள மாவட்ட தேசிய மாணவர் படை தலைமையிடங்களை அணுகலாம்.

டி.பி.எம்.மைதீன்கான்
சுற்றுச்சூழல் துறை அமைச்சர்